2006 மே 26]

49. மகளிருக்குப் பொழுது போக்காகவும், அவர்கள் பொது அறிவு பெற்றிடவும் வீடு தோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம், அறிஞர் அண்ணா பிறந்த, தந்தை பெரியார் பிறந்த முப்பெரும் விழாக்களையொட்டி இவ்வாண்டே தொடங்கப்பட்டு படிப்படியாக நிறைவேற்றப்படும்.

50. ஜவுளி வர்த்தகத் துறையில் உலகில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் முழுப்பயனையும் தமிழகம் பெற்றிடும் வகையில் தமிழ்நாட்டின் நூல், துணி மற்றும் ஆயத்த ஆடைகளின் ஏற்றுமதியைப் பெருக்கவும், நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இவ்வரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

51. கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டு, இச்சங்கங்கள் ஜனநாயக முறைப்படி செயல்பட வழிவகை செய்யப்படும். தற்போதுள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மூன்று அடுக்கு முறையினால் நிருவாகத்தில் ஏற்படும் குறைபாடுகளை அகற்றத் தேவையான சட்டத் திருத்தம் கொண்டு வர மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தும்.

52. உலகத் தமிழர்களின் கவனத்தை ஈர்த்துள்ளதும், தொடர்ந்து கவலை அளித்துக் கொண்டிருப்பதுமான இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை அமைதி பேச்சுவார்த்தையின்மூலம் விரைவில் தீர்க்கப்பட வேண்டுமென்று தமிழ்நாட்டு மக்களின் இந்த அரசு விரும்புகிறது.

53. கச்சத்தீவு அருகில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப்பு உரிமைகளை நிலைநாட்டவும் தமிழக மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களையவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மீனவர்களுக்குத் தேவையான மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் குளிர் பதன நிலையங்கள் உருவாக்கப்படும்.

54. தமிழக மக்களின் நீண்ட காலக் கனவான சேது சமுத்திரத் திட்டம், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் ரூபாய் 2,427 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிறைவு பெறுவதற்கு தங்குதடையின்றி அனைத்து ஒத்துழைப்பையும் இவ்வரசு மத்திய அரசுக்கு வழங்கும்.

55. தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, ஏழைப் பெண்களின் திருமணத்திற்கான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது,

[2006 மே 26

மீண்டும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் நிதியுதவி ரூபாய் 10,000/–லிருந்து ரூபாய் 15,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

56. 1989 ஆம் ஆண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்து முன்னோடியாகவும், அவை திறம்பட செயல்படுவதற்கு ஒரு தூண்டுகோலாகவும் தி.மு.க. அரசு இருந்து வந்துள்ளது. ஆல்போல் பரந்து இருக்கும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இம்மாநிலத்தில் மேலும் வளர்ந்திடவும், வலுப்பெறவும் தேவையான அனைத்து முயற்சிகளையும் இவ்வரசு மேற்கொள்ளும். மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்க தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட 'பூமாலை' திட்டம் மீண்டும் சிறந்த முறையில் இயங்கிட வழிவகை செய்யப்படும். தற்போதுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களைப் போலவே வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய உதவிக் குழுக்கள் திட்டம் விரைவில் துவங்கப்படும்.

57. சட்டமன்ற மேலவையைக் கொண்டு வரத் தேவையான அரசியல் சட்டத் திருத்தம் செய்ய இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

58. இந்த ஆண்டு மேட்டூர் நீர்த்தேக்கத்தில் போதிய அளவு நீர் இருப்பதாலும், பருவ மழை தொடர்கின்ற நல்ல அறிகுறி தென்படுவதாலும், காவிரிப் பாசனப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் மகிழத்தக்க வகையில், ஜூன் 12 ஆம் தேதி பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படுகிறது என்பதைத் தெரிவிப்பதில் இவ்வரசு மகிழ்ச்சியடைகிறது. எனினும், பாசனத்திற்கு வசதியாக ஆறுகள், வாய்கால்களில் தூர்வாரும் வேலையைத் தொடங்கி துரிதப்படுத்தும் பணியை விரைந்து மேற்கொண்டுள்ளோம்.

59. தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத புதுமையாக – புதிய அமைச்சரவை பதவி ஏற்றுக்கொண்ட உடனேயே – அதே அரங்கத்தில், கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கிடையே, தி.மு. கழகத் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் அடையாளமாக '– மூன்று கோப்புகளில் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கையெழுத்திட்டு, மக்களாட்சி வரலாற்றில் மாபெரும் அத்தியாயத்தைத் தொடங்கி வைத்திருப்பது என்றென்றும் நமது நினைவை விட்டகலாத நிகழ்ச்சியாகும்.